14th March 1966]

* 273 கேள்வி—திரு. கோ. சி. மணி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65, 1965-66-ம் வருடங்களில் தஞ்சை மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குதல், மற்றும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் முதலிய வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவற்றுள், இதுவரை செலவழிக்கப்பட்டுள்ள தொகை முறையே எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு விட்டு மனைகள் வழங்கவும், சாலைகள் அமைக்கவும் 1964-65-ம் ஆண்டிற்கு 2,52,600 ரூபாயும், 1965-66-ம் ஆண்டிற்கு 2,22,600 ரூபாயும் ஒதுக்கப்பட்டது.

(இ) 1964-65-ல் ஆன செலவு—

விட்டு மனைகளுக்காக ரூ. 1,34,007.67.

சாலைகளுக்காக ரூ. 1,18,592.33.

1965-66-க்கான செலவு (31—12—1965 வரை ஆன செலவு)—

விட்டு மனைகளுக்காக ரூ. 2,06,819.94.

சாலைகளுக்காக ரூ. 15,970.65.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1964, 1965, 1966 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த செலவான தொகையைக் குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் எவ்வளவு தொகை இருந்தால் அந்த பிரச்னையை பூராவாக நிவர்த்தி செய்ய முடியும், அந்த லட்சியம் எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேறும் என்கிற விவரம் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

அரசாங்க நந்தனர் உயர்நிலைப் பள்ளிகள்

* 274 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் அரசாங்க நந்தனர் உயர்தர ஆண், பெண் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள், ஆசிரியைகள் பற்றுக்குறை இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதுபற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.